2011 ஆகஸ்ட் 26] [திரு. ஞா. செந்தமிழன்]

அவர்கள் தமிழ்மீது வைத்திருந்த பற்று. சிறிய தயாரிப்பாளர் படங்களாக இருந்தாலும் சரி, பெரிய தயாரிப்பாளர் படங்களாக இருந்தாலும் சரி, எத்தனை நாள் ஓடக்கூடிய நல்ல படங்களாக இருந்தாலும் சரி, தியேட்டர்களிலே இந்தக் கம்பெனிகள் சார்பாக வெளியிடப்படும் படங்கள் திரையிடப்பட வேண்டுமென்றால் தியேட்டர்களுடைய உரிமையாளர்கள் மிரட்டப்பட்டு, அந்தப் படங்களெல்லாம் எடுக்கப்பட்டு, இவர்களுடைய படங்கள்தான் திரையிடப்பட்டு ஓடின.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலோடு அன்றைக்கு எதிர்க்கட்சி வரிசையிலேயிருந்து சட்டமன்றத்திலேகூட இதையெல்லாம் நாங்கள் பேசினோம். ஆனால், அது அத்தனையும் செவிடன் காதில் ஊதிய சங்காகத்தான் இருந்தது. ஆனால், இன்றைக்கு the Rule of Law என்று சொல்லக்கூடிய சட்டத்தின் ஆட்சி மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையிலே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) நூறு நாட்களிலே நூறு ஆண்டுகாலச் சாதனையை நிகழ்த்திய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) சினிமா துறையினருடன் நலன்களையும் சேர்த்து, காப்பார்கள் என்று சொல்லி இந்த அளவில் விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No clarification.

## 2. விதி 110-ன்கீழ் அறிக்கை

### அரசுப் பள்ளிகளைத் தரம் உயர்த்துவது, ஆசிரியர் பணியிடங்களை நிரப்புவது, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது, முப்பருவ முறையை அறிமுகம் செய்வது குறித்த மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) Detail-ஆகச் சொல்லியாகிவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் தயவுசெய்து உட்காருங்கள். பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)* Please sit down.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி என்னும் வற்றாத செல்வம், தனி மனிதன் வாழ்க்கையை வளம் பெறச் செய்யவும், அவன் சார்ந்த சமுதாயத்தின் மேம்பாட்டிற்கும், நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமைகிறது. பொருளாதார வளர்ச்சி அடைவது மட்டுமின்றி, வாழ்க்கையில் பல்வேறு நலன்களையும் முழுமையாகப் பெறுவதற்குக் கல்வி இன்றியமையாததாகிறது. இத்தகைய பயன்மிக்க கல்வியை மாநிலம் முழுவதும் உள்ள குழந்தைகளுக்குத் தரமாக அளிப்பதற்கும்; அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் பாதுகாப்பான சூழ்நிலையில் குழந்தைகள் கல்வி கற்கும் வசதியை அளிப்பதற்கும், இவைமூலம் உண்மையான, நிலையான சமச்சீர் கல்வி வழங்கிடவும் எனது தலைமையிலான அரசு முன்னுரிமை அளித்து வருகிறது.*

*அந்த வகையில், மாநிலத்தில் உள்ள பள்ளி மாணவ, மாணவியர்கள் தரமான கல்வியைப் பெறும்வகையில், எனது தலைமையிலான அரசால் செயல்படுத்தப்பட்டுள்ள சில புதிய திட்டங்கள் குறித்து நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.*

*அனைவருக்கும் தரமான கல்வியை வழங்குவது என்ற இவ்வரசின் நோக்கத்தின் ஓர் அங்கமாக, மேலும் 65 தொடக்கப் பள்ளிகளை நடுநிலைப் பள்ளிகளாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) 710 நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) ஆக மொத்தம் 775 பள்ளிகளை, 419 கோடியே 60 இலட்சம் ரூபாய் செலவில் நிலை உயர்த்த (மேசையைத் தட்டும் ஒலி) நான் ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

---

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

பள்ளிகளைத் தரம் உயர்த்துவதனால் மட்டும் தரமான கல்வியை மாணவர்களுக்கு அளிக்க முடியாது. தேவைக்கேற்ப ஆசிரியர்களும் இருக்க வேண்டும் என்பதை எனது அரசு உணர்ந்துள்ளது. எனவே, நிலை உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்கும், ஆசிரியர்-மாணவர் விகிதத்தின் அடிப்படையில் கூடுதல் ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்த எனது தலைமையிலான அரசு முடிவெடுத்துள்ளது. அதன்படி, 9,785 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் (மேசையைத் தட்டும் ஒலி) மற்றும் 3,565 இடை நிலை ஆசிரியர் பணியிடங்கள், (மேசையைத் தட்டும் ஒலி) ஆக மொத்தம் 13,300 ஆசிரியர் பணியிடங்களை, 315 கோடியே 30 இலட்சம் ரூபாய் செலவில் இந்த ஆண்டிலேயே ஏற்படுத்த ஆணையிட்டுள்ளேன் என்பதை மகிழ்ச்சியுடன் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-15

உண்மையான சீரான கல்வி என்பது பாடப் புத்தகத்திற்கு மட்டுமே முக்கியத்துவம் அளிக்காமல் கல்வி இணைச் செயல்பாடுகளுக்கும் உரிய முக்கியத்துவம் அளிக்கவேண்டும். இதனடிப்படையில், உடற்கல்வி, ஓவியம், தொழிற்கல்வி ஆகியவற்றுக்காக ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் 16,549 பகுதிநேர ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் இப்பள்ளிகளில் 6, 7 மற்றும் 8 ஆம் வகுப்புகளில் பயிலும் மாணவ, மாணவியர் பயனடைவர். இதற்கு அரசுக்கு ஆண்டொன்றுக்கு 99 கோடியே 29 இலட்சம் ரூபாய் செலவு ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முனைவர் முத்துக்குமரன் குழு அளித்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு, சமச்சீர் கல்விக்கு மிகவும் இன்றியமையாதது அடிப்படை உள்கட்டமைப்பு வசதிகளாகும். பொதுப் பாடத் திட்டம் மட்டும் சமச்சீர் கல்வியாகாது. இதனை நன்கு உணர்ந்த எனது அரசு, ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள், நடுநிலைப் பள்ளிகள், அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், இந்தக் கல்வியாண்டில், கூடுதல் வகுப்பறைகள், கழிப்பறைகள், சுகாதாரமான குடிநீர் வசதி, சுற்றுச்சுவர் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட உடனடி நடவடிக்கை எடுக்கவுள்ளது

என்பதை மிகவும் உவகையுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தக் கல்வியாண்டில் 1,082 கோடியே 71 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் இவை ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

மேற்கண்ட திட்டங்கள் அனைத்தும், மத்திய அரசும், மாநில அரசும் இணைந்து செயல்படுத்தும் அனைவருக்கும் கல்வித் திட்டம் மற்றும் அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் ஆகிய திட்டங்களின்கீழ் செயல்படுத்தப்படும்.

மேலும், நிலை உயர்த்தப்பட்ட மேல்நிலைப் பள்ளிகளுக்கு, 3,187 முதுகலை ஆசிரியர் பணியிடங்கள், முழுவதும் மாநில அரசின் நிதியிலிருந்து, 90 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில், இந்தக் கல்வியாண்டு முதல் இரண்டு கட்டங்களில் ஏற்படுத்தப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

1985 ஆம் ஆண்டிலிருந்து அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகளுக்கு இலவசமாகப் பாடப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன. மாணவர்களிடமிருக்கும் ஏற்றத்தாழ்வுகளை நீக்கும் நல்லெண்ணத்துடன் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் படிக்கும் அனைத்து மாணவ, மாணவியர்களுக்கும் ஒரே மாதிரியான புத்தகப் பைகள், கற்றலுக்குத் தேவையான கணித உபகரணப் பெட்டி, அதாவது Geometry Box, கிராமப்புற மாணவ, மாணவியர்களுக்கு இதுவரை கிடைக்கப்பெறாத வண்ணப் பென்சில்கள் மற்றும் புவியியல் வரைபடங்கள் போன்றவை வரும் கல்வியாண்டு முதல் வழங்கப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக ஆண்டொன்றுக்குத் தோராயமாக 119 கோடியே 48 இலட்சம் ரூபாய் செலவிடப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

சுத்தம் மற்றும் சுகாதாரமான சுற்றுச்சூழல் பள்ளிக் கூடங்களில் அமையப்பெற வேண்டும் என்பது எனது திடமான எண்ணம் ஆகும். எனவே, அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் துப்புரவாளர் மற்றும் இதர பணிகளுக்கான 5,000 ஆசிரியர் அல்லாத பணியிடங்கள் ஏற்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் காரணமாக, அரசுக்கு ஆண்டொன்றுக்கு 60 கோடி ரூபாய் செலவு ஏற்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில், குழந்தைகளின் புத்தகச் சுமை குறைக்கப்படும் என்ற வாக்குறுதி கொடுக்கப்பட்டுள்ளது. குழந்தைப் பருவத்தில் தேவைக்கு அதிகமாகப் புத்தகச் சுமையைத் தூக்குவதால் ஏற்படும் உடல்நலக் குறைப்பாடுகளைக் குறைக்கும் நோக்கத்துடன் வரும் கல்வியாண்டு முதல் இப்புத்தகச் சுமையைக் குறைக்கும் வகையில் தமிழ்நாட்டில் முப்பருவ முறை, அதாவது, Trimester pattern அறிமுகப்படுத்தப்படும். முழுக் கல்வியாண்டிற்குரிய பாடப் புத்தகங்கள் மூன்று பருவங்களுக்கு ஏற்றவாறு பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பருவ முடிவிலும் தொடர் மற்றும் கூட்டு மதிப்பீட்டுடன்கூடிய தேர்வுகள் நடத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் மாணவர்களின் கவலை, அச்சம், மன அழுத்தம் ஆகியவை பெரிதும் குறைக்கப்படுவதுடன், பள்ளி செல்லும் குழந்தைகளுக்குப் புத்தகச் சுமையினால் ஏற்படும் இன்னல்கள் நீக்கப்படும் என்பதை மன நிறைவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10-20

10 மற்றும் 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் தேர்ச்சி பெறும் மாணவ, மாணவியருக்கு வழங்கப்படும் மதிப்பெண் சான்றிதழ்கள் தவறாகக் கையாளப்படக்கூடிய வாய்ப்பு உள்ளதைத் தவிர்க்கும்பொருட்டு, அவர்களது புகைப்படம் மற்றும் இரகசியக் குறியீட்டுடன்கூடிய மதிப்பெண் சான்றிதழை வழங்க எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, 10 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவ, மாணவியருக்கு அவர்களின் புகைப்படத்துடன்கூடிய மறைமுகக் குறியீட்டுடன் மதிப்பெண் சான்றிதழ்கள் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாணவ, மாணவியர்களின் திறமையையும், ஆற்றலையும் வளப்படுத்துவதற்கு அவர்களின் சிந்திக்கும் ஆற்றலை மேம்படுத்துவது மிகவும் அவசியம். இதனைக் கருத்தில் கொண்டு, குழந்தைகளின் சிந்திக்கும் ஆற்றலை மேம்படுத்தும் நோக்கத்துடன், 7 முதல் 17 வயதுள்ள பள்ளி செல்லும் மாணவ, மாணவியருக்கு சதுரங்க விளையாட்டு வரும் கல்வியாண்டு முதல் அறிமுகப்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த விளையாட்டினால் மாணவ, மாணவியரின் அறிவுத் திறன் வளர்வதுடன், கூர்மையாகச் சிந்திக்கும் ஆற்றலும் விரிவடையும்.

கணினி மூலம் கற்பது பள்ளிகளில் தற்போது இன்றியமையாததாக உள்ளது. மாணவ, மாணவியர்கள் தமது பாடப் புத்தகங்களுக்கு அப்பாற்பட்டு, பற்பல குறிப்புகளையும் பாடத்திற்கு ஏற்ற மேற்கோள்களையும் மற்றும் தேவையானத் தகவல்களையும் அறிந்துகொள்வதற்கு கணினி முக்கியமான ஒன்று என்பதனை உணர்ந்து, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் +1 மற்றும் +2 பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு இலவச மடிக்கணினி வழங்கும் திட்டத்தினை அறிவித்துள்ளேன். அதனைத் தொடர்ந்து, எல்லா வகுப்புகளிலும் படிக்கும் மாணவ, மாணவியர்கள் பயன்பெறும் விதத்திலும் தமிழகத்திலுள்ள அரசு தொடக்க, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் கற்பிக்கும் ஆசிரியர்/ஆசிரியைகளின் வகுப்பறைக் கற்றல், கற்பித்தல் முறைகளை மேம்படுத்தும் வகையிலும் ICT@Schools (Information and Communication Technology@Schools), Tamil Nadu என்ற புதிய திட்டம் உருவாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தில் எல்லா வகுப்புகளுக்குமான பாடப் புத்தகங்களின் உட்பொருளை கணினிமயமாக மாற்றி, மையக் கணினி மூலமாக வகுப்பறைகளில் வழங்க வழிவகைச் செய்யப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) எல்லா மாணவ, மாணவியர்களும் பயனடையும்பொருட்டு சிறந்த ஆசிரியர்களின் விரிவுரைகளின் தொகுப்புகள் கல்வி செயற்கைக் கோள் வாயிலாக வகுப்பறைகளுக்குச் சென்றடைய இத்திட்டத்தின் வாயிலாக நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை இந்த அவைக்குப் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பள்ளிக் கல்வித் துறைமூலம் எனது அரசு செயல்படுத்த இருக்கும் இந்தத் திட்டங்களால், மாநிலத்தில் உள்ள பள்ளி மாணவ, மாணவியர்கள், உரிய உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய பள்ளிகளில், மிகவும் உகந்த சூழலில், தரமானக் கல்வி கற்கும் நிலை உருவாகி, உண்மையான சமச்சீர் கல்வி கிடைக்க வழிவகுக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, Please sit down.

2011 ஆகஸ்ட் 26]

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் என்னுடைய அனுமதியில்லாமல் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.* Doctor, please sit down. Please sit down. *(குறுக்கீடு)* Doctor, please sit down. *பேரவை முடிந்தவுடன், நீங்கள் என்னுடைய அறைக்கு வாருங்கள்; அதுபற்றி* discuss *செய்யலாம். (குறுக்கீடு) நீங்கள் பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. உட்காருங்கள். (குறுக்கீடு)* Doctor, please sit down. Please sit down. *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

*முற்பகல் 10-25*

## 3. விதி 110-ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அளித்த அறிக்கைக்கு நன்றி தெரிவித்தல்

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சபை நடவடிக்கைகள் தொடங்கி* Zero Hour-*ம் இன்றைக்கு இல்லையென்ற நிலையில், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஒரு சிறப்பான திட்டத்தை, இந்தியாவிற்கே ஒரு முன்னோடியான திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் இருக்கின்ற அத்தனைக் கல்வியாளர்களின் மனதிலும் ஏற்பட்டிருந்த சஞ்சலங்களைப் போக்குகின்ற வகையில், எது உண்மையான சமச்சீர் கல்வித் திட்டம் என்பதற்கு எடுத்துக்காட்டாக மாண்புமிகு அம்மா அவர்கள் கல்வியில் ஒரு புதிய வரலாற்றினைத் தொடங்கியிருக்கின்றார்கள். இந்தியாவிற்கே முன்னோடித் திட்டமாக இது அமையும் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) சட்டப் பேரவை வரலாற்றில் இதற்கு முன்னால் எத்தனையோ அரசுகள் இருந்திருக்கின்றன, ஆனால், கல்வியில் ஒரு புரட்சியை ஏற்படுத்திய ஒரே அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுதான் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*மாண்புமிகு அம்மா அவர்கள், எதிர்காலத்தில் தமிழகத்தில் கல்வி பயிலும் மாணவ, மாணவிகள், இந்தியாவில் இருக்கின்ற*

---

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*